தினமலர் 22.02.2012

# புதுவாழ்வுத் திட்ட கம்ப்யூட்டர் பயிற்சி

விருத்தாசலம், பிப். 22-

விருத்தாசலம் அடுத்த பூதாமூரில் புதுவாழ்வு திட்டம் சார்பில் கிராம புற பெண்களுக்கு கம்ப்யூட்டர் பயிற்சி நடந்தது.

மாவட்ட திட்ட மேலாளர் நித்தியானந்தம் தலைமை தாங்கினார். உதவி திட்ட மேலாளர் நாராயணன் முன்னிலை வகித்தார்.

விருத்தாசலம் மற்றும் நல்லூர் ஒன்றியங்களில் இருந்து 51 ஊராட்சிகளைச் சேர்ந்த பெண்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. 15 நாட்கள் அளிக்கப்படும் பயிற்சியில் டேலி சாப்ட்வேர் பயன்படுத்தும் முறை, அதன் மூலம் வரவு செலவு கணக்குகளை பதிவு செய்வது உள்ளிட்ட பயிற்சிகள் அளிக்கப்படுகிறது.



விருத்தாசலம் பூதாமூரில் புதுவாழ்வுத் திட்டம் சார்பில் கிராமப்புற பெண்களுக்கு கம்ப்யூட்டர் பயிற்சி நடந்தது.

தினகரன் 22.02.2012

# கிராமப்புற பெண்களுக்கு கணினி பயிற்சி

விருத்தாசலம், பிப் 22: கடலூர் மாவட்டத்தில் புது வாழ்வு திட்டத்தின் மூலம் விருத்தாசலம், நல்லூர், காட்டுமன்னார் கோவில், மங்களூர் ஒன்றியங்களில் 236 ஊராட்சிகளில் 240 கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள் செயல்பட்டு வருகிறது. தற்போது முதல் கட்டமாக விருத்தாசலம் மற்றும் நல்லூர் ஒன்றியங்களை சேர்ந்த 51 ஊராட்சிகளை சேர்ந்த 240 கிராமப்புற பெண்களுக்கு வறுமை ஒழிப்பு சங்கத்தின் வரவுகள், செலவுகள், சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான வரவு, செலவுகள் கணினி டேலி சாப்ட்வேர் மூலம் செயல்படுத்துவதற்கான பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சியை மாவட்ட திட்ட மேலாளர் நித்தியானந்தம், உதவி திட்ட மேலாளர் நாராயணன் ஆகியோர் பார்வையிட்டனர். விருத்தாசலம், நல்லூர் ஒன்றியங்களில் புது வாழ்வு திட்டத்தில் பணிபுரியும் பணியாளர்கள் மக்கள் கற்றல் மையத்துடன் இணைந்து பயிற்சியை நடத்திவருகின்றனர்.